முதலாம் தவணைப் பரீட்சை - 2021

தரம் - 10 **வரலாறு** **நேரம் -3 மணித்தியாலம்**

சுட்டெண் ..... **33T I** **ஆசிரியர்- நா.பிரகாஸ்**

பகுதி – 1

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.

1) மகாவம்சத்தின் முதல் பாகத்திற்கு விளக்கமளிக்கும் வகையில் எழுதப்பட்ட உரை நூல்.
   1. சூளவம்சம் 3. வம்சத்தபகாசினி
   2. தீபவம்சம் 4. போதிவம்சம்

2) பின்வரும் நூல்களுள் கம்பளை முதல் கோட்டை காலத்தில் அரசியல் தகவல்களை உள்ளடக்கி எழுதப்பட்ட உரை நூலாக அமைவது.
   1. மயுரசந்தேசய 3. நிகாயசங்கிரகய
   2. மகாவம்வம் 4. ராஜாவலிய

3) இலங்கை வரலாற்றில் போதிமர வழிபாடு தொடர்பான விடயங்களை உள்ளடக்கி எழுதப்பட்ட நூல்.
   1. மகாவம்சம் 3. தூபவம்சம்
   2. போதிவம்சம் 4. தீபவம்சம்

4) பின்வரும் இலக்கியங்களில் போர்க்காவியமாக அமையும் விடை.
   1. மயுர சந்தேசய 3. சீதாவாக்க சட்டன
   2. பெரகும்பா சிரித 4. திசர சந்தேசய

5) அனுராதபுரத்தின் ஆரம்ப காலம் தொடக்கம் இலங்கை வெளிநாடுகளுடன் எந்நோக்கத்தை அடிப்படையாக கொண்டு அதிக தொடர்புகளை ஏற்படுத்தினர்.
   1. வர்த்தகம் 3. அரசியல்
   2. சமயம் 4. திருமணம்

6) இலங்கைக்கு நேரடியாக வருகை நூல் எழுதாத கிரேக்க நாட்டை சேர்ந்த எழுத்தாளர்.
   1. பிளினி 3. பர்ணாவோ டி குவைரோஸ்
   2. அரிஸ்ரோட்டில் 4. றொபட் நொக்ஸ்

7) இலங்கை பற்றிய தகவல்களை உள்ளடக்கப்பட்டுள்ள தென்னிந்திய இலக்கிய மூலாதாரமாக அமையாதது.
   1. சிலப்பதிகாரம் 3. பத்துப்பாட்டு
   2. மணிமேகலை 4. இண்டிகா

8) இலங்கையில் பராதன காலத்தில் கல்வெட்டுகள் எவ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது.
   1. பிராமி 3. சமஸ்கிருதம்
   2. பாளி 4. பிராகிருதம்

www.lkedu.lk

9) நிரல் 1 இல் கல்வெட்டு வகைகளும் நிரல் 2 இல் அவை எழுதப்படுள்ள அமைப்புகளும் குறிப்பிடப்பட்டுள்ளது அவற்றை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடை சோடி.

நிரல் 1	நிரல்2
1) குகைக் கல்வெட்டு	A. செப்பனிடப்பட்ட கருங்கல் தூண்களில் எழுதப்பட்டவை.
2) பாறைக் கல்வெட்டு	B. கற்பாறைகளின் மேல் எழுதப்பட்டவை.
3) தூண் கல்வெட்டு	C. கற்குகைகளில் பிலிகளின் அருகில் எழுதப்பட்டமை.
4) இருக்கை கல்வெட்டு	D. செப்பனிடப்பட்ட கற்பலகைகளில் எழுதப்பட்டவை.
5) சுவர்க் கல்வெட்டு	E. மலர் ஆசனங்கள் போன்ற கற்பலகைகளில் எழுதப்பட்டவை.

1. CBAED 2. BACDE 3. DACBE 4. ABCED

10) வரலாற்றை கற்பதன் முக்கியத்துவங்களுள் ஒன்றாக அமையாத விடை.
1. நாட்டின் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளல்.
2. மாற்று கலாசாரத்தை மதித்தல்.
3. சுற்றுலா துறை முன்னோற்றத்துக்கு காரணமாக அமைந்தன.
4. வேறுபட்ட கருத்துக்களை சகித்துக் கொள்ளல்.

11) வல்லிபுர பொற்சாசனத்தில் நகதீப என அழைக்கப்பட்ட இடமாக அமைவது.
1. கண்டி
2. யாழ்ப்பாணம்
3. மாகம
4. அனுராதபுரம்

12) இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும் மிகப் பிரதானமான நூலும் தொடர்ச்சியாக எழுதப்பட்டு வருவதுமான நூல்.
1. தீபவம்சம்
2. மகாவம்சம்
3. நிகாயசங்கிரஹய
4. பூஜாவலிய

13) கி.பி 2ஆம் நூற்றாண்டின் பின் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்ட விடயம்.
1. சமூக வரலாறு , குடியேற்ற பரம்பல் , பரம்பரை
2. கல்வெட்டு பொறிப்பித்தவர் , விகாரை நிர்வாகம் , அரச கட்டளை
3. விகாரைக்கு வழங்கப்பட்ட கிராமங்கள் , வரி அளவீடு , தனிநபர் சேவை பாராட்டுதல்
4. வரி அறவீடு , குடியேற்ற பரம்பல் , பரம்பரை

14) கிபி 14. கி.பி 7 அல்லது 8ம் நூற்றாண்டில் இசுறு முனிய விகாரையில் காணப்படும் குதிரை தலை மனித உருவம் குறிக்கும் விடயங்களை முறையே.
1. அக்கினி தெய்வம் பர்ஜன் தெய்வம்
2. பர்ஜன் தெய்வம் அக்கினி தெய்வம்
3. பர்ஜன் தெய்வம் சுவஸ்திகா தெய்வம்
4. இலக்குமி தெய்வம் அக்கினி தெய்வம்

15) 80000 வருடங்களுக்கு முன்னர் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்ட வெளி இடம்.
1. பதிராஜவெல
2. பாகியன்கல
3. புந்தல வெல்லே கங்கொட
4. உடமல்ல

16) சுடப்பட்ட பலாவிதைகள் , உப்பு பயன்பாடு தொடர்பான ஆதாரம் கிடைக்கப் பெற்ற குகை.

1. பாகியன்கல
2. இராவண எல
3. கித்துல்கல பெலிலென
4. பெல்லன்பதிபெல்லஸ்ஸ

17) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தாழ்நில ஈரவலய மனிதன் அதிகம் விரும்பி உண்ட உணவு.

1. நத்தை
2. மலைப்பாம்பு
3. காட்டு பாக்கு
4. காட்டுப்பலா

18) முன்வரலாற்று காலம் தோற்றம் பெறுவதற்கு செல்வாக்கு செலுத்திய காலநிலை மாற்றம்.

1. பிளைத்தோசின் யுகம்
2. பெலிசொயிக் யுகம்
3. ஹொலோசின் யுகம்
4. சிலூரியன் யுகம்

19) பின்வருவனவற்றுள் தாழ்நில உலர்வலய குகை வசிப்பிடத்துக்கு உதாரணமாக காணப்படுவது.

1. சிகிரிய பொத்தன
2. புந்தல
3. பதிராஜவெல
4. இராவண எல

20) கி.பி 6ம் நூற்றாண்டில் 35000 பேர் வசித்ததாக கருதப்படும் இடம்.

1. அனுராதபுரம்
2. மாகம
3. பாலநறுவை
4. கண்டி

21) முன்வரலாற்று காலத்தில் இறந்த ஒருவருக்கு மரண சடங்கு மேற்கொள்ளப்பட்டதற்கான கல்லறை மயானம் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.

1. இப்பன்கட்டுவ
2. உடரஞ்சாமடம்
3. பட்டதொம்பெலன
4. பெரகல

22) முன்வரலாற்று காலத்தில் உடரஞ்சாமடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளை நிற பின்னனியில் சிவப்பு நிற கோடுகள் வரையப்பட்ட மட்பாத்திரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

1. சாடி
2. பானை
3. மடக்கு
4. குவளை

23) வரலாற்று காலத்தில் குளத்தை அடிப்படையாக கொண்ட கிராமம் அழைக்கப்பட்ட விதம்.

1. எல்லங்கால
2. பரிகித்தகம
3. வாவிகாம
4. தொட்ட போஜக

24) வரலாற்றுக் காலத்தில் நிலத்தை தோண்டி மண் பூசி அத்திவாரம் அமைக்கப்பட்ட வீடு கண்டறியப்பட்ட இடம்.

1. உடரஞ்சாமடம்
2. வலகம்பத்து
3. அனுராதபுரம்
4. மாகம

www.ikedu.lk

25) குருநாகல் கல்லென விகாரை ,கனேகந்த விகாரை கல்வெட்டுகளில் அவரண என அழைக்கப்பட்ட குளத்தின் பகுதி.

1. அணைக்கட்டு
2. கலிங்கல்
3. அலைதாங்கி
4. கலிங்கல் தொட்டி

26) பிரதேச தலைவர் பத்து பேரை கொண்ட சபை கல்வெட்டில் அழைக்கப்பட்ட விதம்.

1. பருமக
2. தொட்டபோஜக
3. தசகம் எத்தன
4. புரகமத்த

27) குடும்ப தலைவன் பிராமிக் கல்வெட்டுக்களில் அழைக்கப்பட்ட முறை.

1. கஹபதி
2. குர்ஹபதி
3. கமிக
4. பருமக

28) கி.மு 700-450 காலகட்டத்தில் பருமகமாரால் பயன்படுத்ததாக கண்டுபிடிக்கப்பட்ட மயானம்.

1. இப்பன்கட்டுவ
2. பாகியன்கல
3. உடரஞ்சாமடம்
4. பெரகல

❖ பின்வரும் A-G வரையான கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு 29-31 வரையான வினாக்களுக்கு விடை தருக

A- வரலாற்று முதல் குளம் அமைத்தல்.
B- எல்லாளனை தோற்கடித்து சிங்கள ஆட்சியை தாபித்தல்.
C- பத்தாவது ஆட்சியாண்டில் கிராமங்களுக்கு எல்லையிடல்.
D- ருவன்வெலிசாய விகாரை அமைத்தல்.
E- யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தல்.
F- பெலநறுவையை தலைநகராக தெரிவு செய்தல்.

29) பண்டுகாபய மன்னனுடன் தொடர்புடைய கூற்று.

1. AC 2. BC 3. EF 4. ED

30) துட்டகைமுனு மன்னனுடன் தொடர்புடைய கூற்று

1. BC 2. AD 3. BD 4. AC

31) F கூற்றுடன் தொடர்புபட்ட மன்னன்.

1. 1ம் விஜயபாகு
2. 3ம் விஜயபாகு
3. பண்டுகாபயன்
4. 6ம்பராக்கிரமபாகு

32) இலங்கை முழுவதையும் ஒருங்கிணைத்து ஆண்ட முதல் மன்னன்.

1. தாதுசேனன்
2. 1ம் காசியப்பன்
3. துட்டகைமுனு
4. 6ம் பராக்கிரமபாகு

33) தம்புள்ள விகாரை பாறை கல்வெட்டில் மனிதர்களின் கடவுள் என குறிப்பிடப்பட்ட மன்னன்.

1. குட்டகண்ண அபயன்
2. மகாசேனன்
3. 1ம் காசியப்பன்
4. நிசங்கமல்லன்

www.ikedu.lk

34) புராதன காலத்தில் நிர்வாக கட்டமைப்பில் காசு அச்சிடும் பிரிவுக்கு பொறுப்பானவர் அழைக்கப்பட்ட விதம்.

1. பதகு
2. ஹதி அதெக
3. மஹமத
4. ரூப அதெக

35) இலம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன்.

1. வசபன்
2. தாதுசேனன்
3. மகாசேனன்
4. பண்டுகாபயன்

36) புராதன காலத்தில் நீதிமன்றம் அழைக்கப்பட்ட விதம்.

1. மகாலேகம்
2. சபாவ
3. வதால
4. ஏக அஸ்தான சாம்ய

37) பின்வரும் நிரல் 1 இல் மன்னர்களும் நிரல் 2 பணிகளும் தரப்பட்டுள்ளது. அவற்றை அடிப்படையாக கொண்டு சரியான விடையை ஒழுங்குபடுத்துக.

நிரல்1	நிரல்2
I. புத்ததாசன்	A- சொத்திசால வைத்தியசாலை அமைத்தல்.
II. 1ம் உபதிஸ்ஸ	B- உபசக்கரோகநாச எனும் வைத்தியசலை அமைத்தல்.
III. 4ம்காசியப்பன்	C- பஸவந்திநாமசால எனும் வைத்தியசலை அமைத்தல்.
IV. பண்டுகாபயன்	D- வைத்தியசலைகளை நிர்மானித்தல்.

1. ACDB 2. DACB 3. DCBA 4. BCDA

38) பத்தினி தெய்வ கோயில் திறப்பு விழாவிற்கு தென்னிந்தியாவின் சேர நாட்டுக்கு சென்ற மன்னன்.

1. 1ம் கஜபாகு
2. 6ம் அக்குபா
3. 1ம் விஜயபாகு
4. பாதிகாபயன்

39) பொலனறுவையில் கட்டப்பட்ட தலதா மாளிகையின் பாதுகாப்புக்காக வேலைக்காரப் படையை நியமித்த மன்னன்.

1. 1ம் விஜயபாகு
2. பண்டுகாபயன்
3. வசபன்
4. மகாசேனன்

40) தேவநம்பிய தீசனுக்கு பின் அரசுரிமையை பெற்ற அவரது சகோதர்களுள் ஒருவராக அல்லாதவர்.

1. சூரதிஸ்ஸ
2. அசேல
3. உத்திய
4. சம்பல

www.lkedu.lk

முதலாம் தவணைப் பரீட்சை - 2021

தரம் - 10	வரலாறு	நேரம் -3 மணித்தியாலம்
சுட்டெண்	33 T II	ஆசிரியர்- நா.பிரகாஸ்

பகுதி – 11

அறிவுறுத்தல் :

- பகுதி 1 இன் முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி11 இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி111 இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்க விடை எழுதுக.

பகுதி 1

01) அ) கீழே (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களில் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (11) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களில் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I. கலாஓயா , மாணிக்கங்கை , இரணைமடு குளம் , கலாவாவி , நல்லூர் , கோட்டை , ஊர்காவற்றுறை , கோகர்ண , காலி , மாகம , கதிர்காமம் , இப்பன்கட்டுவ

II. மத்திய தரைக்கடல் , கள்ளிக் கோட்டை , யப்பான் , இத்தாலி ,சுமாத்திரா தீவு ,பர்மா

ஆ) I மேல்வரும் A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

A. கல்பொத்த கல்வெட்டு பொறிப்பித்த பொலநறுவைக் கால மன்னன்.
B. வரலாற்று மூலாதாரங்களில் இலங்கையை ஆண்ட முதல் மன்னன்.
C. சோழர் ஆட்சியை முடித்து சிங்கள ஆட்சியை ஆரம்பித்தவர்.
D. பருமகமார்களுக்கு உயர் பதவிகளை வழங்கி அரசியல் அதிகாரத்தை மையப்படுத்திய மன்னன்.

- A,B ஆகிய படங்களை அவதானித்த கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளை வினா இலக்கங்களில் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii)



1. அருகில் காணப்படம் கல்வெட்டு யாது
2. இதனை பொறிப்பித்த மன்னன்
3. இக் கல்வெட்டில் அடிப்பகுதியில் காணப்படும் உருவங்கள்
4. இக் கல்வெட்டு எக்காலப்பகுதிக்குரியது

iii)



1. அருகில் காணப்பட்டிருப்பது யாது.
2. இது கண்டுபிடிக்கப்பட்ட இடம்.
3. இது இலங்கையின் எக்காலப்பகுதிக்குரியது.
4. இதனைப் போல் மட்பாண்டம் வேறு எங்கு காணப்படுகிறது.

www.ikeyu.lk

2) 1. புராதன காலத்தில் இலங்கையில் நாணயங்கள் கிடைக்கப் பெற்றுள்ள நாடுகள் மூன்று குறிப்பிடுக. **(3 புள்ளி)**

2. இலங்கையில் காணப்பட்ட கல்வெட்டின் வகைகள் நான்கு குறிப்பிடுக. **(4 புள்ளி)**

3. வரலாற்றை கற்பதற்கு இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்துவதன் பயன்கள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக. **(5 புள்ளி)**

4. தொல்பொருள் மூலாதாரம் அழிவடைந்து செல்வதற்கான காரணங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. **(6 புள்ளி)**

3) 1. இலங்கையின் தற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. **(3 புள்ளி)**

2. A. தாழ்நில உலர்வலய பகுதியில் வாழ்ந்த மனிதன் வேட்டையாடிய விலங்குகள் இரண்டு குறிப்பிடுக.

B. தாழ்நில ஈரவலயப் பகுதிகளில் இருந்து பெறப்பட்ட தாவர உணவுகள் இரண்டு குறிப்பிடுக. **(4 புள்ளி)**

3. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கை முறை காணப்பட்ட விதத்தை இரண்டு காரணங்களினூடாக விளக்குக. **(5 புள்ளி)**

4. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மரணச் சடங்கு மேற் கொள்ளப்பட்ட முறையினை மூன்று ஆதாரங்களுடன் விளக்குக. **(6 புள்ளி)**

4) 1. தற்கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலய குகைகள் மூன்று குறிப்பிடுக. **(3 புள்ளி)**

2. பின்வரும் A தொடக்கம் D வரையான கூற்றுகளுக்கு பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A. சுடப்பட்ட பலா விதைகள் கிடைக்கப் பெற்ற இடம்.
B. களிமண் ஓட கல்லறை மயானம் கிடைக்கப் பெற்ற இடம்
C. மட்பாண்டம் உருவாக்க பயன்பட்ட உபகரணம்.
D. வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமம். **(4 புள்ளி)**

(பரிகித்தகம , இப்பன்கட்டுவ , கித்துல்கல பெலிலென , அபரிகிரித்தம , வனைதல் சில்லு உடரகஞ்சாமடம்)

3. வரலாற்று காலம் நிறுவுவதில் செல்வாக்கு செலுத்திய பௌதீக அம்சங்கள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. **(5 புள்ளி)**

4. முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. **(6 புள்ளி)**

5) 1. வரலாற்றுக்கால குளக் குடியேற்ற கிராமங்கள் உதாரணம் மூன்று குறிப்பிடக **(3 புள்ளி)**

2. பின்வரும் A-D தொடக்கம் வரையான கூற்றுகளுக்கு பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A. விவசாயிகள் வாழ்ந்த கிராமம்
B. இடையர் வாழ்ந்த கிராமம்

www.lkedu.lk

C. தச்சர் வாழ்ந்த கிராமம்

D. குயவர் வாழ்ந்த கிராமம் **(4 புள்ளி)**

(கோபாலகாம , மணிகாரகாம , கும்பகாரகாம , கசிகாரகாம . கோபாலகாம , வட்டகீகாம)

3. வரலாற்று காலத்தில் வீடமைப்பு காணப்பட்டதற்கான ஆதாரம் கிடைக்கப் பெற்ற சான்றுகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. **(5 புள்ளி)**

4. வரவாற்று காலத்தில் பொருளாதாரம் நிலவிய விதத்தை மூன்று காரணங்கள் ஊடாக விளக்குக. **(6 புள்ளி)**

6) 1. பின்வரும் பதவிப் பெயர்கள அழைக்கப்பட்ட விதத்தை குறிப்பிடுக.

a. குர்ஹபதி

b. கமிக

c. பருமக **(3 புள்ளி)**

2. பின்வரும் A-D வரையான மன்னர்கள் அழைக்கப்பட்ட புகழ் பெயர்களை குறிப்பிடுக.

A. குட்டகண்ண அபயன்

B. மகாசேனன்

C. 1ம் காசியப்பன்

D. நிசங்க மல்லன் **(4 புள்ளி)**

3. புராதன காலத்தில் இலங்கையில் அரசுரிமை வழங்கப்பட்ட முறைகள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக. **(5 புள்ளி)**

4. இலங்கை வரலாற்றில் பண்டுகாபய மன்னனின் சேவைகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. **(6 புள்ளி)**

7) 1. பின்வரும் பதவிப் பெயர்கள் அழைக்கப்பட்ட விதத்தை குறிப்பிடுக.

A. தொட்டபோஜக -

B. எல்லங்காவ -

C. பருமகலு - **(3 புள்ளி)**

2. பின்வரும் A-D வரையான பதவிகள் புராதன காலத்தில் அழைக்கப்பட்ட விதத்தை குறிப்பிடுக.

A. பொருளாளர்

B. யானைப்பிரிவின் தலைவர்

C. அரசன்

D. அமைச்சர் **(4 புள்ளி)**

3. கமிகவின் கடமைகள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. **(5 புள்ளி)**

4. வசப மன்னன் இலங்கை வரலாற்றில் முக்கியம் பெறும் விதத்தை மூன்று காரணிகள் ஊடாக விளக்குக. **(6 புள்ளி)**

www.lkedu.lk